FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8384103

1. District : மாவட்டம் ஈரோடு PS: ஊ.கு.கா. பிரிவு காவல்நிலையம் ஈரோடு Year: ஆண்டு 2026 FIR No.: 05/PC/2026 முத.த‌.அ. எண் Date: நாள் 06.08.2026

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a) 08.00hrs
(ii) Act சட்டம்: Act, 1988 as amended by Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: the PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை இடைநில் சுமார் 1 1/2 மணிநேரமாக

(b) Information Received at PS. Date : 05.08.2026 Time : 18.00
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) GD Vol II 05.08.2026 Time : 18.00
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுந்து மேலாக (கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் பற்றி காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி ஈரோடு மாவட்டம் ஈரோடு மாநகர் ஆயுதப்படை மைதானம் ஈரோடு. சுமார் 03 கி.மீ. தெற்கே

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்குள்ளாக நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : V. சண்முகசுந்தரம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் வையாபுரி
(c) Date / Year of Birth : 1971 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் இரவுக் காவலர் (தற்காலிக பணி) (g) Address : முகவரி 24/23, ரங்கசாமி, ஜீவாபள்ளி நிலம் (மே?) ஈரோடு.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பட்டிருக்கிற / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி. மதன, பட்டாற உளவுத்துறை அலுவலர் (பட்டாற உளவுத்துறை), ஈரோடு மாநகர் ஆயுதப்படை அலுவலகம், ஈரோடு மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறைப்பட்டாரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதமுமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. Shanmugasundaram 6/8/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

06/8/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 06.08.2026 / 09.45 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. ராஜா
Rank: நிலை தலைமைக் காவலர்,
உ.கு.கு. பாரி,
ராஜா.

Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 05/AC/2026 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M.ரேகா ஆகிய நான் 05.08.2026 தேதி மாலை 06.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது V.சண்முகசுந்தரம், த/பெ வையாபுரி, கதவு எண் 24/23 ஞானபுரம், வீரப்பன்சத்திரம் அஞ்சல், ஈரோடு என்பவர் நிலையம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டிருந்த ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் V.சண்முகசுந்தரம் (வயது 55), த/பெ வையாபுரி, கதவு எண் 24/23 ஞானபுரம், வீரப்பன்சத்திரம் அஞ்சல், ஈரோடு 638004. பெறுநர் உயர்திரு. லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, ஈரோடு. அம்மா, நான் ஈரோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இரவு நேரக்காவலராக சுமார் 2019ம் வருடம் முதல் தினக்கூலி அடிப்படையில் வேலை செய்து வருகிறேன். அந்த அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) திருமதி.லதா அவர்கள் பணிபுரிந்து வருகிறார். அவர் பொறுப்பேற்ற சமயத்தில் எனக்கு தினக்கூலியாக ரூ.761/- என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாதமும் சுமார் ரூ.22,860/- அளவில் எனது வங்கி கணக்கில் வரவாகும். வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.லதா அவர்கள் என்னிடம், நீயே தொடர்ந்து இந்த வேலையில் இருக்கவேண்டும் என்றால், இனி வரும் காலங்களில் வங்கி கணக்கில் வரவாகும் சம்பளத்தொகையில் ஒவ்வொரு மாதமும் ரூ.11000/-ஐ தனக்கு தனியாக கொடுத்துவிடவேண்டும் என்றும், மீதி தொகையைத்தான் நான் சம்பளமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், அப்படி கொடுக்க மறுத்தால் என்னை வேலையை விட்டு நிறுத்திவிட்டு, வேறு நபரை வேலைக்கு வைத்துக்கொள்வேன் என்றும் மிரட்டினார். அவருக்கு மாதம் ரூ.11000/- கொடுத்தபின்பு எனக்கு மாதத்தின் நாட்களின் எண்ணிக்கையை பொருத்து ரூ.11000/- முதல் ரூ.12000/- வரை சம்பளமாக கிடைக்கும். என்னை வேலையை விட்டு நிறுத்திவிட்டால் அந்த பணமும் கிடைக்காமல் போய்விடும். என்னால் வேறு வேலைக்கும் போக முடியாது. எனவே எனக்கு வேறு வழியில்லாத காரணத்தால் சுமார் ஒன்னறை வருடங்களாக எனக்கு சம்பளம் வங்கியில் வரவானதும், அந்த தொகையிலிருந்து ரூ.11000/-ஐ வங்கியிலிருந்து எடுத்து, திருமதி.லதா அவர்களிடம் ரொக்கமாக கொடுத்துவிடுவேன். இந்நிலையில் நான் கடந்த 19.06.2026ம் தேதியன்று

Scanned with OKEN Scanner

கீழே விழுந்ததில் சிறுசிறு காயங்கள் ஏற்பட்டது. அதனால் கடந்த ஜூன் மாதத்தில் 19.06.2026 தேதி முதல் 26.06.2026ம் தேதிவரை 7 நாட்கள் நான் வேலைக்கு செல்லவில்லை. ஆனால் அந்த விடுப்பு நாட்களுக்கும் சேர்த்து சம்பளத்தை கோரி பில் தயார் செய்துள்ளார்கள். அந்த தேதிகளுக்கும் சேர்த்து என்னிடம் கையெழுத்துகளை வாங்கிக்கொண்டார்கள். நான் வேலை செய்த நாட்களுடன் மேற்படி விடுப்பு நாட்களுக்கும் சேர்த்து ஜூன் மாதத்திற்கான சம்பளம் எனது வங்கி கணக்கில் வரவாகிவிட்டது. இந்நிலையில் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.லதா அவர்கள், என்னை அழைத்து ஜூன் மாதத்திற்கான சம்பளத்தில் ரூ.11000/-ஐ ரொக்கமாக எடுத்துக்கொண்டு வருமாறும், ஜூன் மாதம் நான் விடுப்பில் இருந்த 7 நாட்களுக்கான சம்பளமும் சேர்ந்து வந்திருக்கும் என்றும் அதனை அடுத்தமாதம் சம்பளம் வந்ததும் அதனையும் கொடுத்துவிடவேண்டும் என்றும் கூறினார். நான் சரி என்று சொல்லிவிட்டு, வழக்கம்போல போன மாதமும் ரூ.11000/- ரொக்கமாக எடுத்து திருமதி.லதா அவர்களிடம் கொடுத்துவிட்டேன். இதன்பிறகு இந்த ஜூலை மாதம் நான் வேலை செய்ததிற்கான சம்பளம் கடந்த 01.08.2026 தேதி எனது வங்கி கணக்கில் வரவாகிவிட்டது. இந்நிலையில் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.லதா அவர்கள் கடந்த 04.08.2026ம் தேதி மாலை நான் வேலைக்கு வந்தபோது, என்னை அழைத்து இந்த மாதத்திற்கான சம்பளத்தில் ரூ.11000/-ம், மேலும் ஜூன் மாதம் நான் விடுப்பில் இருந்த நாட்களுக்கான சம்பளம் ரூ.6000/- ம் சேர்த்து மொத்தம் ரூ.17000/-ஐ ரொக்கமாக எடுத்துக்கொண்டு வந்து தனக்கு கொடுக்குமாறும் சொன்னார். நான் லீவில் சென்ற நாட்களுக்கான சம்பளம் எனக்கு வேண்டாம் என்றும், ஆனால் எனக்கு அடிபட்டதில் கொஞ்சம் செலவாகிவிட்டது என்பதால் அந்த ரூ.11000/-ஐ இந்தமாதம் கொடுக்க முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் அப்படியெல்லாம் விட முடியாது, எனக்கு நிறைய செலவுகள் இருக்கிறது, அதனால் உடனே போய் பணத்தை எடுத்துக்கொண்டுவா என்று சொல்லிவிட்டார். நான் அவ்வாறு பணத்தை எடுத்துக்கொண்டுபோய் கொடுக்காத காரணத்தால் மாலை சுமார் 6 மணியளவில் என்னை அழைத்து என்ன ஆச்சு, ஏன் இன்னும் பணத்தை எடுத்துக்கொண்டு வரவில்லை என்று கேட்டார். என்னால் ஏ.டி.எம் ல் பணம் எடுக்க முடியவில்லை என்று சொன்னதும், சரி நாளை காலையில் நான் வரும்போது, பணத்தை எடுத்துவந்து கொடுத்துவிட வேண்டும் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். அதன்பின்னர் இன்று

Scanned with OKEN Scanner

(05.08.2026 தேதி) காலையில் நான் பணி முடித்து கிளம்ப இருந்த நிலையில் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி. லதா அவர்கள் என்னை கூப்பிட்டு பணம் என்ன ஆச்சு என்று கேட்டார். நான் இன்னும் பணம் எடுக்க வில்லை என்றும் கொஞ்ச நேரத்தில் எடுத்துக்கொண்டு வருகிறேன் என்றும், கீழே விழுந்து செலவாகிவிட்டதால் சிரமமாக இருக்கிறது, அதனால் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்றும் சொன்னேன். அதற்கு அவர், இந்த மாதத்திற்குரிய தொகை ரூ.11000/-ஐ மட்டும் இன்று எடுத்துக்கொண்டு வருமாறும், லீவு நாளுக்கான சம்பளதொகை ரூ.6000/-ஐ வரும் மாதங்களில் மாதம் ரூ.2000/- வீதம் கொடுத்துவிடுமாறும், உன்னை கஷ்டப்படுத்த விரும்பவில்லை என்றும் சொன்னார். நான் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் நான் மீண்டும் அவரை இன்று மதியம் சுமார் 12.30 மணியளவில் செல்போனில் அழைத்து, என்னால் இன்னும் பணம் எடுக்க முடியவில்லை என்றும், தொகையை குறைத்துக்கொள்ளும் படியும் சொன்னேன். அதற்கு அவர் சில வினாடிகள் மவுனமாக இருந்தார். பின்னர் நான் மேடம் ரூ.10,000/- கொடுத்துவிடட்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் சரி கொண்டு வா, இன்று சாயந்திரமே கொண்டுவா, கொண்டுவந்து பொண்ணுமணியிடம் கொடுத்துவிடு என்று சொன்னார். நான் மேடம் நாளைதான் கொடுக்க முடியும் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி நாளை காலையில் கொடுத்துவிடு என்றும், ஆனால் நாளை கண்டிப்பாக கொடுத்துவிடவேண்டும் என்றும் சொன்னார். நான் சரி என்று சொல்லிவிட்டு, போனை கட் செய்துவிட்டேன். பின்னர் நான் யோசித்து பார்த்ததில் எனக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.லதா அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம் மாதாமாதம் லஞ்சமாக பணம் கேட்டு வாங்கியதுடன் இந்த மாதமும் லஞ்சம் கேட்டு தொந்தரவு செய்யும் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.லதா அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd XXXXXXX) 05.08.2026. நாள்: 05.08.2026, இடம்: ஈரோடு.

Sir, Received the above said computer typed complaint on 05.08.2026 at 18.00 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The reliability and the antecedents of the complainant were found to be genuine and the accused reputation was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.05/AC/2026 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC

(Amendment) Act, 2018 today on 06.08.2026 at 08.00 hrs. Sd/- (xxxxxxxx) 05.08.2026 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.V.Shanmugasundaram, S/o Vaiyapuri, 24/23, Gnanapuram, Veerapanchathiram Post, Erode 638004 is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

06/8/26

(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.